ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_{3}$மாந்தமஹாதே$_{3}$ஶிகாய நம:

பெரியவாச்சான் பிள்ளை தொகுத்தருளிய

# திவ்யப் பிரபந்த பாசுர ராமாயணம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_{3}$ராமாநுஜ மஹாதே$_{3}$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்யப் பிரபந்த பாசுர ராமாயணம்

ஸ்ரீமத்க்ரு’ஷ்ணஸமாஹ்வாய நமோ யாமுநஸூநவே ।
யத்கடாக்ஷைகலக்ஷ்யாணாம் ஸுலப$_4$: ஸ்ரீத$_4$ரஸ்ஸதா$_3$ ॥

## பால காண்டம்

திரு மடந்தை மண் மடந்தை இரு பாலும் திகழ ⋆
நலம் அந்தம் இல்லதோர் நாட்டில் ⋆
அந்தமில் பேரின்பத்தடியரோடு ⋆
ஏழ் உலகம் தனிக்கோல் செல்ல வீற்றிருக்கும் ⋆
அயர் வறும் அமரர்கள் அதிபதியான ⋆
அணியார் பொழில் சூழ் அரங்க நகரப்பன் ⋆
அலைநீர்க் கடலுள் அழுந்தும் நாவாய் போல் ⋆
ஆவார் ஆர் துணை என்று துளங்கும் ⋆
நல்ல அமரர் துயர் தீர ⋆
வல் அரக்கர் இலங்கை பாழ் படுக்க எண்ணி ⋆
மண் உலகத்தோர் உய்ய ⋆
அயோத்தி என்னும் அணி நகரத்து ⋆
வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்க் ⋆
கௌசலை தன் குல மதலை ஆய்த் ⋆
தயரதன் தன் மகனாய்த் தோன்றிக் ⋆
குணம் திகழ் கொண்டல் ஆய் மந்திரம் கொள்
    மறை முனிவன் வேள்வி காக்க நடந்து ⋆
வந்தெதிர்ந்த தாடகை தன் உரத்தைக் கீறி ⋆
வல் அரக்கர் உயிருண்டு கல்லைப் பெண்ணாக்கி ⋆

காரார் திண் சிலை இறுத்து ⋆
மைதிலியை மணம் புணர்ந்து ⋆
இருபத் தொருகால் அரசு களை கட்ட ⋆
மழு வாளி வெவ்வரி நற்சிலை வாங்கி வென்றி கொண்டு ⋆
அவன் தவத்தை முற்றும் செற்று ⋆
அம்பொனெடு மணி மாட அயோத்தி எய்தி ⋆

**அயோத்தியா காண்டம்**

அரி அணை மேல் மன்னன் ஆவான் நிற்கக் ⋆
கொங்கைவன் கூனி சொற் கொண்ட ⋆
கொடிய கைகேயி வரம் வேண்ட ⋆
அக் கடிய சொற் கேட்டு மலக்கிய மா மனத்தனனாய்
மன்னவனும் மறாதொழியக் ⋆
குலக் குமரா காடுறையப் போ என்று விடை கொடுப்ப ⋆
இந் நிலத்தை வேண்டாது ஈன்றெடுத்த தாயரையும்
இராச்சியமும் ஆங்கொழிந்து ⋆
மைவாய களிறொழிந்து மா ஒழிந்து தேர் ஒழிந்து ⋆
கலனணியாதே காமர் எழில் விழல் உடுத்து அங்கங்கள்
அழகு மாறி ⋆
மானமரு மென்னோக்கி வைதேவியின் துணையா ⋆
இளங்கோவும் வாளும் வில்லும் கொண்டு பின் செல்லக்
கலையும் கரியும் பரிமாவும் ⋆
திரியும் கானம் கடந்து போய்ப் பத்தி உடைக் குகன் கடத்தக்
கங்கை தன்னைக் கடந்து ⋆
வனம் போய்ப் புக்குக் காயோடு நீடு கனி உண்டு ⋆
வியன் கான மரத்தின் நீழல் ⋆
கல் அணை மேல் கண் துயின்று ⋆

சித்திரகூடத் திருப்ப ⋆
தயரதன் தான் நின் மகன் மேல் பழி விளைத்திட்டு
என்னையும் நீள் வானில் போக்க என் பெற்றாய் கைகேசீ !
நானும் வானகமே மிக விரும்பிப் போகின்றேன் ⋆
என்று வான் ஏறத் தேன் அமரும் பொழில் சாரல் சித்திரகூடத்து ⋆
ஆனை புரவி தேரோடு காலாள் அணி கொண்ட
சேனை சுமந்திரன் ⋆
வசிட்டருடன் பரத நம்பி பணியத் ⋆
தம்பிக்கு மரவடியை வான் பணயம் வைத்துக் குவலயத்
துங்கக் கரியும் பரியும் இராச்சியமும் ⋆
எங்கும் பரதற்கருளி விடை கொடுத்துத் திரு உடைய
திசைக் கருமம் திருத்தப் போய்த் தண்டகாரணியம் புகுந்து ⋆

## ஆரண்ய காண்டம்

மறை முனிவர்க்கு அஞ்சேல்மின் ! என்று விடை கொடுத்து ⋆
வெங்கண் விறல் விராதனுக வில் குனித்து வண்டமிழ்
மா முனி கொடுத்த வரிவில் வாங்கிப் புலர்ந்தெழுந்த
காமத்தால் சீதைக்கு நேராவன் ⋆
என்னப் பொன் நிறம் கொண்ட சுடு சினத்த சூர்ப்பணகாவைக்
கொடி மூக்கும் காதிரண்டும் கூரார்ந்த வாளால் ஈரா விடுத்துக் ⋆
கரனொடு தூடணன் தன் உயிரை வாங்க ⋆
அவள் கதறித் தலையில் அங்கை வைத்து ⋆
மலை இலங்கை ஓடிப்புகக் கொடுமையில் கடுவிசை அரக்கன் ⋆
அலை மலி வேற் கண்ணாளை அகல்விப்பான் ⋆
ஓர் உருவாய் மானை அமைத்துச் சிற்றெயிற்று
முற்றல் மூங்கில் மூன்று தண்டத்தனாய் வஞ்சித்து ⋆
இலைக் குரம்பில் தனி இருப்பில் கனி வாய்த்

திரு வினைப் பிரித்து ⋆
நீள் கடல் சூழ் இலங்கையில் அரக்கர் குடிக்கு
நஞ்சாகக் கொடுபோய் ⋆
வம்புலாம் கடி காவில் சிறையாய் வைக்க ⋆
அயோத்தியர் கோன் மாய மான் மாயச் செற்று ⋆
அலைமலிவேற் கண்ணாளை அகன்று தளர்வெய்திச்
சடாயுவை வைகுந்தத்தேற்றிக் ⋆
கங்குலும் பகலும் கண் துயில் இன்றிக்
கானகம் படி உலாவி உலாவிக் ⋆
கணை ஒன்றினால் கவந்தனை மடித்துச் ⋆
சவரி தந்த கனி உவந்து ⋆

## கிச்கிந்தா காண்டம்

வன மருவு கவி அரசன் தன்னோடு காதல் கொண்டு
மராமரம் ஏழ் எய்து ⋆
உருத்தெழு வாலி மார்பில் ஒரு கணை உருவ ஓட்டிக் ⋆
கருத்துடைத் தம்பிக்கு இன்பக் கதிர் முடி அரசளித்து ⋆
வானரக் கோனுடன் இருந்து வைதேகி தனைத் தேட
விடுத்த திசைக் கருமம் திருத்து ⋆
திறல் விளங்கு மாருதியும் மாயோன் தூதுரைத்தல் செப்ப ⋆ !

## சுந்தர காண்டம்

சீராரும் திறல் அநுமன் மாக் கடலைக் கடந்தேறி ⋆
மும்மதிள் நீள் இலங்கை புக்குக் கடி காவில் ⋆
வாராருமுலை மடவாள் வைதேகி தனைக் கண்டு ⋆
நின் அடியேன் விண்ணப்பம் கேட்டருளாய் ! ⋆
அயோத்தி தன்னில் ஓர் இடவகையில்

எல்லியம் போதினி திருத்தல் ⋆
மல்லிகை மா மாலை கொண்டங்கார்த்ததும் ⋆
கலக்கியமா மனத்தனளாய் கைகேயி வரம் வேண்ட ⋆
மலக்கிய மா மனத்தனனாய் மன்னவனும் மறாதொழியக்
குலக் குமரா ! காடுறையப் போ என்று விடை கொடுப்ப ⋆
இலக்குமணன் தன்னோடங்கேகியதும் ⋆
கங்கை தன்னில் கூர் அணிந்த வேல் வலவன் குகனோடு
சீர் அணிந்த தோழமை கொண்டதுவும் ⋆
சித்திரகூடத் திருப்பப் பரத நம்பி பணிந்ததுவும் ⋆
சிறு காக்கை முலை தீண்ட மூவுலகும் திரிந்தோடி
வித்தகனே ! ராமா ஓ ! நின் அபயம் என்ன
அத்திரமே அதன் கண்ணை அறுத்ததுவும் ⋆
பொன் ஒத்த மான் ஒன்று புகுந்தினிது விளையாட ⋆
நின் அன்பின் வழி நின்று சிலை பிடித்தெம் பிரான் ஏகப் ⋆
பின்னே அங்கிலக்குமணன் பிரிந்ததுவும் ⋆
அயோத்தியர் கோன் உரைத்த அடையாளம் ⋆
ஈதவன் கைமோதிரமே என்று ⋆
அடையாளம் தெரிந்துரைக்க ⋆
மலர் குழலாள் சீதையும் வில் இறுத்தான் மோதிரம் கண்டு ⋆
அனுமான் அடையாளம் ஒக்கும் என்று உச்சி மேல்
வைத்துகக்கத் திறல் விளங்கு மாருதியும்
இலங்கையர் கோன் மாக் கடி காவை இறுத்து ⋆
காதல் மக்களும் சுற்றமும் கொன்று ⋆
கடி இலங்கை மலங்க எரித்து அரக்கர் கோன்
சினம் அழித்து மீண்டு ⋆

அன்பினால் அயோத்தியர் கோன் தளிர் புரையும்
அடி இணை பணிய ⋆

**யுத்த காண்டம்**

கான எண்கும் குரங்கும் முசுவும் படையாக் கொடியோன்
இலங்கை புகல் உற்று ⋆
அலையார் கடற்கரை வீற்றிருந்து ⋆
செல்வ விபீடணற்கு நல்லானாய் ⋆
விரி நீர் இலங்கை அருளிச் ⋆
சரண் புக்க குரை கடலை அடல் அம்பால் மறுக எய்து ⋆
கொல்லை விலங்கு பணி செய்ய ⋆
மலையால் அணை கட்டி மறுகரை ஏறி ⋆
இலங்கை பொடி பொடி ஆகச் சிலை மலி செஞ்சரங்கள்
செலவுய்த்துக் கும்பனோடு நிகும்பனும் பட
இந்திரசித்தழியக் கும்பகர்ணன் பட ⋆
அரக்கர் ஆவி மாள ⋆
அரக்கர் கூத்தர் போலக் குழமணி தூரமாட ⋆
இலங்கை மன்னன் முடி ஒருபதும் தோள் இருபதும்
போய் உதிரச் சிலைவளைத்துச் சர மழை பொழிந்து
கரந்துணிந்து வெற்றி கொண்ட செருக் களத்துக்
கடிக் கமல நான்முகனும் கண்மூன்றத்தானும் ⋆
எண்மர் பதினொருவர் ஈர் அறுவர் ஓர் இருவர்
மற்றும் உள்ள வானவர் மலர் மழை பொழிந்து ⋆
மணி முடி பணிதர அடி இணை வணங்கக் கோலத்திரு
மா மகளோடு ⋆
செல்வவீடணன் வானரக் கோன் உடன் இலகு மணி
நெடுந்தேரேறி ⋆

சீர் அணிந்த குகனோடு கூடி ⋆
அங்கணெடு மதிள் புடை சூழ் அயோத்தி எய்தி
    நன்னீர் ஆடிப் பொங்கிள ஆடை அரையில் சாத்தித் ⋆
திருச் செய்ய முடியும் ஆரமும் குழையும்
    முதலா மேதகு பல்கலன் அணிந்து ⋆
சூட்டு நன் மாலைகள் அணிந்து ⋆
பரதனும் தம்பி சத்துருக்கனனும்
    இலக்குமணனும் இரவு நன் பகலும் ஆட்செய்ய ⋆
வடிவிணை இல்லாச் சங்குதங்கு முன்கை நங்கை
    மலர்க் குழலாள் சீதையும் தானும் ⋆
கோப்புடைய சீரிய சிங்காதனத்திருந்து ⋆
ஏழ் உலகும் தனிக் கோல் செல்ல வாழ்வித்தருளினார் ⋆

திவ்யப் பிரபந்த பாசுர ராமாயணம் முற்றிற்று